
ISSN 2454-3993

• மலர் 3 • சிறப்பிதழ் 4 • மார்ச், 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்



பதிப்பாசிரியர்கள்

திருமதி. மு. கவிதா

முனைவர் ஆ. ஜோஸ்பின் செலின் மேரி

தொகுதி - 2

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

தமிழ்த்துறை

புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

அமல அன்னை நகர், தாமரைப்பாடி,

திண்டுக்கல் - 624 005.

UGC Approved Journal Number: 40729

VOLUME 3 | SPECIAL ISSUE 4 | MARCH 2019

Shanlax International Journal of Tamil Studies

(A Peer-reviewed - Scholarly Indexed Quarterly Journal)

SHANLAX INTERNATIONAL JOURNALS

editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

## "பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை,<br>புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>தாமரைப்பாடி, திண்டுக்கல் - 624 005. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 270 |

**ISSN: 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **"பன்நோக்குப் பார்வையில் இலக்கண இலக்கியங்கள்"**

# இலக்கியத்தில் பழந்தமிழரின் அணிகலன்கள்

**டே. சோபியா அன்புச்செல்வி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

மக்கள், வயிறார உண்டு களித்த பின்னர்தான் தங்களை அழகு செய்து கொள்ள விரும்பினர். முதலில் கண்ட மலர், அரும்பு, காய் முதலியவற்றை அணியாக அணிந்தனர். மண்ணாலும், மரத்தாலும், கல்லாலும் அணிமணிகள் செய்தனர். மருந்துப் பொருட்களால் கூட உயர்ந்த நாகரிகம் தோன்றியது அரிய கலைகள் அரும்பின. பொன்னாலான அணிகலன்கள் தோன்றியது பொன் அணிகளில் ஒளி திகழுமாறு மரகதம், நீலம், வைரம், மாணிக்கம், புட்பராகம், பவளம் போன்ற வண்ணங்களை அமைத்து செய்தனர். அணிகலன்கள் மக்களுடைய அழகுணர்ச்சியையும், தொழில் நுட்பத்தையும், செல்வ நிலையையும், சமுதாப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைப்பதாக விளங்குகின்றது. தமிழரின் அணிகலன்கள் தலையணி, கருத்தணி, கையணி, மூக்கணி, காதணி, கைவிரலணி, இடையணி, தொடையணி, பாத அணி, காலணி, கால்விரல் அணி என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

காதின் மேற்புறம் அணியப்படும், கொப்பு, முருபு, காதில் அடிப்புறம் அணியப்படும் நாகவடம், கடுக்கண், மூக்கின் நடுத்தண்டில் அணியப்படும் முத்துப்புல்லாக்கு, மூக்குத்தி, தாலி, மெட்டி போன்றவை இடைக்காலத்தில் தோனிறய அணிகலன்களாகும்.

பிற்காலத்தில் காதணி, சிமிக்கி, தொங்கட்டான், கழுத்தணி, அட்டிகை, பதக்கம், இடையணி, ஒட்டியாணம், காலணிமெட்டி, கொலுசு போன்றவை இடைக்காலத்தில் வடிவமைக்கப்பட்டன. அணிகலன்களை ஆண்கள், பெண்கள், ஆண்குழந்தை பெண் குழந்தைகளுக்குரியன எனப் பயன்பாட்டின் அடிப்படையில் பகுத்தறியலாம். தமிழர்கள் அணிந்து வந்த பழங்கால அணிகலன்கள் பற்றிய செய்திகளை அறியலாம்.

## தலையணிகள்

இலை, கடிகை, கோதை, சுரிதகம், சூடிகை, சொருகுப்பூ, தலைப்பாளை, தெய்வ உத்தி, பட்டம், பிறை, புல்லகம், பொலம் பூந்தும்பை, அரசிலை, பொன்னரிமாலை, முஞ்சம், வயந்தகம், வலம்புரி, சூழி இவ்வணிகள் அனைத்தும் சங்க காலத் தமிழர்கள் அணிந்துள்ளனர்.

தலைவன் வினைமுடிந்து மீண்டு வரும்போது தலைவி அழகு பொருந்திய கைவினையில் வல்ல கம்மியன் பல வண்ணக் கற்களை இட்டிழைத்த பொன்னாலாகிய சுரிதகம் என்னும் தலையணியை அணிந்திருந்தாள் என்பதை,

**"........................ காண்தகக்**
**கைவல் வினைவன் தையுபு சொரிந்த**
**சுரிதக உருவின ஆகிப் பெரிய**
**கோங்கம் இரு முகை அவிழ"** **(நற்.86)**

**(சுரிதகம்- திருகிப்பூ போன்றதோர் அணி)**

என்ற நற்றிணைப் பாடல் வழி அறியலாம்.

**கழுத்து அணிகள்**

அணிகலன்களில் கழுத்தணிகள் மிகச் சிறப்புடையன. விலையுயர்ந்த மணிகளைக் கொண்ட அணிகள் அனைத்தும் கழுத்திலே அணிந்தனர். காசுமாலை, கோதை, முத்து மாலை, சவடி, முத்துவடம், ஆரம், பவளமாலை, மணத்தாலி, பூமாலை, பொன்னரி மாலை, நீலமணி, ஐம்படைத் தாலி, புலிப்பல் தாலி போன்ற கழுத்தாணிகளை மகளிர் அணிந்திருந்தனர்.

தலைவி தலைவனுடன் புனல் ஆடும்போது பொன்னாலும் மணியாலும் ஆன கழுத்தணியை அணிந்திருந்தாள்.

**"வண்ண ஒண் தழை நுடங்க, வால் இழை**
**ஒண்ணுதல் அரிவை"** (ஐங்.73)
**பசும் பொன் அவிர் இழை பைய நிழற்ற"** (ஐங்.74)

தலைவி இயற்கை புணர்ச்சியின் போது சிவந்த அணிகலனான பவளமாலையை அணிந்திருந்தாள்.

**"சேயிழை தெளிர்ப்பக் கலைஇ, நாளும்**
**மனைமுதல் வினையொடும் உவப்ப"** (அகம்.51)

தலைவி கழுத்தில் முத்து வடமும், மண நூலான தாலியும், பொன்னாலான அணிகலன்களும் அணிந்திருந்தாள்.

**"கதவால் - தக்கதோ - காழ் கொண்ட இளமுலை"** (கலி.57)
**"மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை**
**வெளவிக் கொளலும் அறன்"** (கலி.62)

**தோள் அணிகள்**

தொடி, தோள்வலயம் போன்ற தோள் அணிகளை அணிந்திருந்தார்கள். தலைவனின் அழகைக் கண்டு காதல் கொண்ட தலைவி அவனையே நினைத்து உடல் மெலிந்து அவள் தொடி கழன்றது.

**"..........ஆவன் தண்டாக் காட்சி**
**கண்டும், கழல்தொடி வலித்த என்"** (நற்.25.11-12)

திருமால் தோளில் வாகுவலயம் என்ற தோள் அணியை அணிந்துள்ளார். (வாகுவலயம் - பாராவளை)

**"தொடியும், உந்தியும், தோள் அணி வலயமும்"** (பரி.13)

**உடலணிகள்**

நித்திலமதாணி, பூண் இவற்றை உடலணியாக அணிந்தனர். தலைவி களவு காலத்தில் தலைவனைச் சந்திக்கும் போது தனது மார்பகங்களில் பூண் அணிந்திருந்தாள்.

**"பூண் தாழ் ஆகம் நாண் அட வருந்திய"** (நற்.93)

சோழ மன்னன் பசிய பொன்னாலாகிய பூண்களை உடலில் அணிந்திருந்தான்.

**"படு மணி யானைப் பசும்பூட் சோழர்"** (நற்.227)
**"பசும் பூண் வழுதி மருங்கை அன்ன"** (நற்.358)

**கைஅணிகள்**

சங்கு வளை, பவள வளை, பொன் வளை போன்ற கையணிகளை பழந்தமிழ் மக்கள் பயன்படுத்தினர். தலைவி தினைப் புனத்தை காவல் செய்யச் செல்லும்போது கைநிறைய வளையல்கள் அணிந்து சென்றாள்.

**"அம்மா மேனி நிரை தொடிக் குறுமகள்!** (நற்.134)
**செறி தோட்டு எல் வளைக் குறுமகள்**
**சிறு புனத்து அல்இய பெரும்புற நிலையே!"** (நற்.306)

**கைவிரல் அணி**

தலைவி உணவு சமைக்கும் போது மெல்லிய விரலில் மோதிரம் அணிந்துள்ளாள்.

**"சிறு தாழ் செறிந்த மெல் விரல் சேப்ப**
**வாளை ஈர்ந் தடி வல்லிதின் வகைஇ"** (நற்.120)

பெண்கள் வளையலோடு பிணிக்கப்பட்டு விரலில் மோதிரம் அணிந்திருந்தனர்.

"ஒள் இழை மகளிர் இலங்கு வளைத் தொடூஉம்
மெல் விரல் மோசை போல, காந்தள்" (நற்.188)

**இடையணிகள்**

முற்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்கள் இடுப்பில் பலவிதமான இடை அணிகள் அணிந்து வந்தனர். ஏணிப்படுகால், கோவை, பாண்டில், மேகலை, காஞ்சி போன்ற இடையணிகளை சங்ககால மக்கள் அணிந்திருந்தனர்.

தலைவி உடன்போக்கு செல்லும் போது இடையில் காசுகளின் வரிசைகளோடு காஞ்சி என்ற இடையணியை அணிந்து சென்றாள். (காஞ்சி - எட்டு முத்து வடங்கள் கோர்த்த அணி)

**கால் அணிகள்**

கால் அணிகள் என்று குறிப்பிடுவது காலின் அடியில் அதாவது பாதத்தின் மீது பொருந்துமாறு அணியும் அணிகள் ஆகும். வீரக்கழல், சிலம்பு, கிண்கிணி போன்ற கால் அணிகளை சங்கத் தமிழர்கள் அணிந்திருந்தனர்.

தலைவி உடன்போக்கு செல்ல முற்படும்போது பருக்கைக் கற்கள் நிரம்பிய தன் சிலம்பைக் கழற்றி வைத்துவிட்டுச் சென்றாள்.

"...................தன் கால்
அரிய அமை சிலம்பு கழீஇ" (நற்.12)

தலைவி முத்துகள் உள்ளே பரவலாக இடப்பட்டு செய்த பொன் சிலம்பை அணிந்திருந்தாள்.

"முத்து அரிப் பொற் சிலம்பு ஒலிப்பத் தத்துற்று" (நற்.110)

**முடிவுரை**

சங்க காலத்தில் மக்கள் பயன்படுத்திய அணிகலன்களைப் பற்றி அறிந்து கொண்டோம். ஆனால் மூக்கணி, கால்விரல் அணி போன்ற அணிகள் அணிந்ததற்கான இலக்கியச் சான்றுகள் இல்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரணிகள் அணிவதை அகற்றிவிட்டு சிற்றணிகளையே அணிய விரும்பினர். இதனால் நம் அணிமணிகள் மறைந்து வருகின்றது. இதன் மூலம் சங்ககால மக்களின் வாழ்க்கைச் சிறப்பினை அறிந்து கொள்ள முடிகின்றது.